*கவனிக்க.- 2007.03.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1489 - 2007 මාර්තු 16 වැනි සිකුරාදා - 2007.03.16

*1489 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 180 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 180 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 181 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனாராமய செயற்சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) சிஹல சரண பின் கெட்டய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

இலங்கை புகையிரதப் பகுதிக்கு கொங்கிறீற் சிலிப்பர்களுடன் உபயோகிப்பதற்கான 50,000 இறப்பர் பாற்றுக்களையும் 2,00,000 ஜீ. ஆர். என். இன்சுலேற்றர் கேஜ் சைட்டுக்களையும், 2,00,000 ஜீ. ஆர். என். இன்சுலேற்றர் ஃபீல்ட் சைட்டுக்களையும் வழங்குவதற்கான கேள்விகள்

இலங்கை, கொழும்பு 10, த. பெ. இல. 355, புகையிர தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள கொள்வனவுச் சபையின் தலைவர் கொங்கிறீற் சிலிப்பர்களுடன் உபயோகிப்பதற்கான 50,000 இறப்பர் பாற்றுக்களையும் 2,00,000 ஜீ. ஆர். என். இன்சுலேற்றர் கேஜ் சைட்டுக்களையும், 2,00,000 ஐ. ஆர். என். இன்சுலேற்றர் ஃபீல்ட் சைட்டுக்களையும் வழங்குவதற்கான கேள்விகளை உற்பத்தியாளர்கள்/விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலை மனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவு செய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

2. 2007.04.26 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) கேள்விகள் மூடப்படும்.

3. மீளப்பெறப்பட முடியாத கேள்விப் பணமாக ரூபா 2,500 ஐ அல்லது அதற்கு சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.04.24 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும். கேள்விப்பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. சீலிடப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்,  
திணைக்கள கொள்வனவு சபை,  
இலங்கைப் புகையிரத சேவைகள்,  
புகையிரத தலைமையகம்,  
ஒல்கொட் மாவத்தை,  
கொழும்பு 10,  
இலங்கை

6. கேள்விப் பத்திர ஆவணங்களை எந்தவிதக் கட்டணமுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம்.

7 மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்பு கொள்ளவும் :

புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர்,  
புகையிரதக் களஞ்சியத் திணைக்களம்,  
ஒல்கொட் மாவத்தை,  
கொழும்பு 10,  
இலங்கை.  
தொலைபேசி இல. : 94 (11) 2432044/94 (11) 2436818.

தொடர்பு இல.: எஸ். ஆர். எஸ்./எவ் 6543

தலைவர்,  
திணைக்கள கொள்வனவுச் சபை

3-398

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்லை, தலன்கம தெற்கு, பாடசாலை ஒழுங்கை, இல. 969 இல் வசிக்கும் கொடிகார ஆரச்சிகே திமலா ஹேமன்தி அபேவர்தன ஆகிய என்னால், பன்னிப்பிட்டிய, கலல்கொடை, கலல்கொடை வீதியில் இல. 38/4 இல் வசிக்கும் ஷம்பிகா சாந்திமாலி அபேசிங்க என்வருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. பீ. தெஹிகமவினால் 2006, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 10 ஆம் இலக்க, அட்டோர்ணித் தத்துவத்தினால் வழங்கப்பட்ட அட்டோர்ணி அதிகாரத்தைத் திருத்தம் செய்து செல்லுபடியற்றதாகவும், அவ் அட்டோர்ணி அதிகாரத்தின் கீழ் இதன் பிறகு செய்யப்படும் ஏதேனும் செயல்பாட்டிற்கும் எனது எவ்வித பொறுப்பும் அல்லது சம்பந்தமும் கிடையாது என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இதனால் அறியத்தருகிறோம்.

கே. ஏ. ரி. ஹேமன்தி அபேவர்தன.

3-397

## அற்றோனித் தத்துவ பத்திரம் மீளப்பெறல்

இல. 284/2 கிம்புட்டான அங்கொடையினை சேர்ந்த கொட்டகலகே லால் பிரேமசிறி, பெரேரா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப்பதாவது என்னால் இல. 284/2 கிம்புட்டான அங்கொடையினை வசிப்பிடமாக கொண்ட கொட்டகலகே உதேசிகா லக்மாலி பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ஆந் திகதி நொத்தாரிசு பி. டபிள்யூ. எம். ஆர். என். கே. உடனவளவினால் நிறைவேற்றப்பட்ட 38 ஆம் இலக்கம் கொண்ட அற்றோனி தத்துவபத்திரத்தினை இத்தால் மீளப்பெற்று, ரத்து செய்து இல்லாதொழிக்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட அற்றோனி தத்துவ பத்திரத்தினை கொண்டு, செய்யப்படும் எத்தகைய செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாக

இருக்க மாட்டேன் என்பதனை இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கொட்டகலகே லால் பிரேமசிறி பெரேரா,
அற்றோனி தத்துவபத்திரம் வழங்கியவர்.

2007.02.22.

3- 412

---

### அட்டோர்னித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது கெஸ்பாவ, பண்டாரகம வீதி, ஆலோக்க உயன இல. 217/எல் என்னுமிடத்தில் வதியும் பண்டுவாவல கங்கானம்கே ஷியாமிந்த உபுல் பண்டுவாவல ஆகிய நான், எனது அட்டோர்னித் தத்துவதாரராக பிலியந்தல, கெஸ்பாவ, மொரகொடவத்த, இல. 312/66 இல் வதியும் தசநாயக்க முதியன்சேலாகே தமிந்தா நிரோஷினி என்பவரை நியமித்து வழங்கிய கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி எச். கே. எம். ஜயவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.01.12 ஆந் திகதியிடப்பட்ட இல. 705 கொண்ட அட்டோர்னித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதாக்குவதாய் இலங்கையரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன். மேலும் எதிர்காலத்தில் இவ் அட்டோர்னித் தத்துவப் பிரகாரம் செய்யப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

பீ. கே. எஸ். யூ. பண்டுவாவல.

3-526

---

### அட்டோர்ணி தத்துவத்தை இரத்தச் செய்தல்

No. 2, Garnet Close, Berryhill Park, Mansfield, Nottingham, N. G. 18, 4XI United Kingdom ஐச் சேர்ந்த டாக்டர் தயானி நந்திகா பத்தொலோமிஸ் நீ நாணயக்காரவாகிய நான், பொது பதிவாளர், பொது மக்கள் மற்றும் 2002, ஒற்றோபர் 21 ஆந் திகதி குறிக்கப்பட்ட சட்டத்தரணி பதவி இல. 6073 ஐந் சேர்ந்த J. P. U. M. சட்டத்தரணி மற்றும் குளியாப்பிட்டி பொதுமக்கள் நொத்தாரிசு ஹெக்டர் S. P. பெரேராவினால் பதவி வழங்கப்பட்டு எனக்கு பொறுப்பளிக்கப்பட்ட எனது சட்டத்தரணி சந்திரசிறி நாணயக்கார ஆகியோருக்கு தலஹிடிமுல்ல பார்ம், தலஹிடிமுல்ல, குளியாப்பிட்டியைச் சேர்ந்த எனது தகப்பன் சந்திரசிறி நாணயக்கார என்னால் 2007, சனவரி 1 ஆந் திகதி முதல் பதவி நீக்கப்பட்டுள்ளார். எனது சட்டத்தரணியாக எதிர்காலத்தில் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கோ அல்லது காணி உறுதிப்பத்திரங்களுக்கோ என்னால் பொறுப்பேற்கப்படமாட்டாது என அறியத்தருகிறேன்.

டாக்டர் தயானி நந்திகா பத்தொலோமிஸ்

3-527

---

## ஏல விற்பனைகள்

### மக்கள் வங்கி-தலைமை அலுவலகம் பிலியந்தல கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிற்றி கோரளை பள்ளேபற்றுவில் பிலியந்தல நாம்பமுணுவவிலமைந்த துண்டு 2சீ மற்றும் துண்டு 2டீ எனக்குறிக்கப்பட்ட பெறுமதிவாந்த நுகஹலந்த என அழைக்கப்படும் காணி, தோட்டம், அதிலுள்ள அனைத்துமுடன்**

**(விஸ்தீரணம் - துண்டு 2 சீ : 0ஏ. 3றூ. 35பே.
துண்டு 2 டீ : 0ஏ. 1றூ. 35பே.)**

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அதேயிடத்தில், 2007, மாச்சு 31 ஆந் திகதி மு. ப. 11.00 மணியிலிருந்து, பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2006.11.16 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின" பத்திரிகைகளையும் 2006.12.01 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் தயவு செய்து பார்க்கவும்.

**சொத்திற்குச் செல்லும் வழி.**- பிலியந்தலையிலிருந்து மஹரகம வீதியினூடு ஏறத்தாழ 2 கி. மீ செல்ல, தொலேகனத்த சந்தியையடைவீர்கள், உங்கள் வலதுபக்கம் திரும்பி, கொட்டாவ வீதியினூடு ஏறத்தாழ 400 மீட்டர்கள் செல்ல, குறித்த காணியானது உங்கள் இடதுபக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏல விற்பனையின் முடிவின் சித்திகரமான கொள்வனவாளர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ஐயும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% ;

(3) ஏலதார் தரகுப்பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;

(4) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூபா 850 ;

(5) விற்பனைக்கான மொத்தச் செலவும் ஏனைய அறவீடுகள் ஏதுமிருப்பின் அவையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி கொள்வனவு விலையின் எஞ்சிய 90% (தொண்ணூறு வீதம்) 30 நாட்களுக்குள், கொழும்பு - 01 டியூக் வீதி, இல. 11, வலய அலுவலகம் (மேற்கு வலயம்), மக்கள் வங்கி உதவிப் பொதுமுகாமையாளரிடம் செலுத்த வேண்டும்.

தொலைபேசி இலக்கங்கள் : 2393678, 2387068, 2327848 மேற்படி விலாசத்தில் காணி உறுதி மற்றும் விவரங்களைப் பெறலாம்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் குறித்த தொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீளவிற்கும் உரிமை வங்கிக்குண்டு.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

மஹநாம ட்ரைவ்
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டை.
தொலைபேசி இலக்கம் : 2863121

3-449

---

**டீ. எப். சி. சி. வங்கி**

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**விஸன் ஆர்ட்ஸ் ஸ்ரூடியோ (பிரைவெட்) லிமிட்டெட் ஏல விற்பனை**

*1190 ஆம் இலக்க அடைமான பிணை உறுதியின் மூலம் அடகு வைக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விவரங்கள்*

***அசையும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் பின்வரும் பொருட்கள் அடங்கியுள்ளன.***

1. பியூஜி புரொன்டியர் - 350
2. சோனி DV CAM டிஜிடல் கமறா
3. பெனசோனிக் 2 CCDS- VHS
4. பியூஜி பிலிம் புரோசஸர்
5. 2 அப்பிள் மெக் G4
6. 4 சோனி மொனிட்டர்ஸ்
7. அப்பிள் மெக் G 3
8. 3 அப்பிள் ஈமெக்
9. 1 நிக்கொன் F4/லென்சஸ்
10. 2 நிக்கொன் FM2/லென்சஸ்
11. 2 மெற்ஸ் பிளாஷ் கன்ஸ்
12. 2 நிக்கொன் பிளாஷ் கன்ஸ்
13. 1 மினோல்டா கலர் மீற்றர்
14. 2 மினோல்டா லைட் மீட்டர்
15. 1 செக்கோனிக் லைட் மீட்டர்
16. ஸ்ரூடியோ லைட்டிங்ஸ்
17. புரோ சைன் இன்ப்ராரெட் கொன்ரோல்
18. நிக்கோன் டெசிகேட்டர்
19. பொட்டோகிராபி இன்டஸ்ரியல் மமியா 120 போர்மட்
20. 4 VHS VCR
21. எடிட்டிங் கொம்பியூட்டர் இக்குவிப்மன்ட்
22. 35 MM பிலிம் ஸ்கானர் மினோல்டா
23. அப்பிள் G4 வேர்க் ஸ்டேசன்
24. அப்பிள் G3 வேர்க் ஸ்டேசன்
25. சொப்ட்வெயார் அன்ட் ஸ்டொக் பெக்றவுன்ட்
26. 3 எயார்கண்டிஷனிங் யுனிட்

இவற்றுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் இல. 292B, காலி வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு 4 என்னும் முகவரியிலுள்ள கட்டிடத்தில் தற்போதுள்ள கருவிகள் சாதனங்கள் அத்துடன் நிறுவனம் தற்சமயம் அல்லது அவ்வப்போது வியாபாரத்தை மேற்கொள்ளும் களஞ்சியசாலைகள், இடங்கள் ஆகியவற்றில் வைத்திருக்கும் மேற்கூறப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் அல்லது அவ்வப்போது மேற்கூறப்பட்ட அசையும் இயந்திரங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கருவிகள் ஆகியவற்றுக்குப் பதிலாக அவ்வப்போது கொண்டுவரப்பட்டு மேற்கூறப்பட்ட களஞ்சியசாலைகளில் அல்லது கட்டிடங்களில் அல்லது நிறுவனம் எவ்வேளையிலும் அதன் வர்த்தகத்தை நடத்தும் ஏனைய இடம் அல்லது இடங்களில் வைக்கப்படும் மேற்கூறப்பட்ட உபகரணங்கள், கருவிகள், உதிரிப்பாகங்கள் ஆகியன உள்ளடங்கலாக.

டீ. எப். சி. சி. வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

டீ. எப். சி. சி. வங்கிக்கு 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் பதியப்பட்டு, கொழும்பு 6, இல.14 பிரான்சிஸ் றோட் எனும் முகவரியைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடைய (இதன் பின்னர் நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) விஸன் ஆர்ட்ஸ் ஸ்ரூடியோ (பிரைவெட்) கம்பனியினால், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு எஸ். வலதரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 24.06.2003 ஆந் திகதிய 1190 ஆம் இலக்க பிணை உறுதியின் கீழ் அடகு வைக்கப்பட்டு, மீளளிக்கப்படாத சொத்து,

***கொடுப்பனவு செய்யப்படும் முறை***.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை வீதம் மாத்திரம்);

(4) மொத்த விளம்பரச் செலவுத்தொகை ரூபா 30,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது

அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011- 2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீ. எப். சி. சி. வங்கியின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ISO 9001: 2000 இலக்க தராதரமுடைய
பிரபல முனனோடி பட்டய ஏல விற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சி அறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி :011-2502680, 011-2585408 |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011-2588176 |
| | மின் அஞ்சல் : sameera@sri.lanka.net |

3-455

---

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் (கடவத்தை கிளை)

ஆதனம் ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் 2007, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பதிவு எல்லைக்குள் அதிகாரிபத்து சியன கோறளையில் லெபொடவில் அமைந்துள்ள நிலஅளவையாளர் சுகத் சமரவிக்ரமவின் 30.06.1986 திகதியுடைய வரைபடம் இலக்கம் 44/1986 இல் காண்பிக்கப்பட்ட யக்கம்பவத்த என்ற காணி. இக்காணியின் விஸ்தீரணம் (1 ஏக்கர், 1 றூட் 11 பேர்ச்சஸ்) மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து.

கடன் எடுத்த 'சுணிலா கொண்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் கொத்ஜட்டுவ வடுகே சந்திரதிலக என்பவர் மேற்படி காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட்டிற்கு ஈடுவைத்துள்ளார்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 29.09.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் "தினகரன்", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் விற்பனை விளம்பரத்துக்காக 16.03.2007ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 16.03.2007 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- கண்டி-கொழும்பு வீதியூடாக கிரில்லவெல்ல சென்று வலது பக்கம் திரும்பி பாதையூடாக வெலபொட சென்று இடது பக்கம் திரும்பி 2 கிலோ மீட்டர் கிராம வீதியூடாக காணிக்கு சென்று அடைய முடியும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% ;
2. உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
3. ஏலதாரரின் தரகுப்பணமான கொள்வனவு விலையின் 2 1/2% ;
4. நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
5. இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
6. விற்பனைக்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
7. கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பிரதான அலுவலகத்தில் அல்லது கடவத்தை கிளையில் பணமாக செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு உரித்து உறுதி பற்றிய விளம்பரத்துக்காக பின்வரும் இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும் :-

எல். பி. சேனாநாயக்க (ஜே. பி.),
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதாரர்,
வர்த்தக உயர்நீதிமன்றம் மற்றும்
கொழும்பு மாவட்ட நீதிமன்றத்துக்கான
விலை மதிப்பிடுநரும், நீதிமன்ற ஆணையாளரும்,
அரச வர்த்தக வங்கிகளின்
சிரேட்ட உத்தரவுபெற்ற ஏலதார்.

முகாமையாளர்
கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்,
143/B, கண்டி வீதி,
கடவத்தை.
தொலைபேசி இல.: 2921456-7
2921454
பக்ஸ் இல.: 2921455

3 -509

---

## வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - அம்பாறை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க ஆதனம் ஏலவிற்பனை**

(நிந்தவூரைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். முத்துமீரான் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, சனவரி 29 ஆந்

*திகதியிடப்பட்ட முறி இல. 5640 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான மொஹமட் மொய்தீன் மொஹமட் அமிரினால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை 2007 மார்ச்சு 30 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**ஆதனத்தின் விவரணம்.**-கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கரவாகு பற்று, கல்முனை பிரிவு இல. 2 இல் அமைந்துள்ளதும் "ரோட்டு வளவு" என அழைக்கப்படுவதும், அத்துடன் தென் பாகத்தில் கிழக்கு மேற்காக பதினெட்டு (18) பாகங்கள் விஸ்தீரணம் கொண்ட பின்பக்கத் தோட்டம் மற்றும் இதன் மத்திய கடை அறையின் தெற்கு பாகத்தில் இருபத்தெட்டு (28) பாகங்களும் பிரிக்கப்பட்ட வட பாகத்தில் கிழக்கு மேற்காக முப்பத்து மூன்று (33) பாகங்களுடன் மேற்கு பாகத்தில் எட்டோடு எட்டில் மூன்று (8 3/8) பாகங்களும் கிழக்கு பாகத்தில் வடக்கு தெற்காக ஏழரை (7 1/2) பாகங்களும் விஸ்தீரணம் கொண்ட தென் அரை பங்கில் "ரோட்டு வளவு" என அழைக்கப்படும் இதே காணியிலுமான தெற்குப் பங்கில் கடை அறையுடன் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணிததுண்டு முழுவதும் வட பாக உரிமையாளர் மற்றும் காணி உரிமையாளரினால் தென் அறையிலுள்ள படிகட்டுக்களினூடாக வடக்கு மேல் மாடி மற்றும்ஏனைய மேல் மாடி அறைகளுக்கு போக்குவரத்து செய்யும் உரிமை கொண்டுள்ள ஆனால் தென்பாக கடை உரிமையாளர் மூலம் கிழக்கு பாக தோட்டத்தில் கழிவறைக்கான குழாய்கள் மற்றும் குழிகள் அமைக்கும் உரிமை தவிர்ந்த அதன் கண் அமைந்துள்ள கீழ் தள கடை அறை, மேல் மாடி கடை அறை மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அதாவது, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. பத்மநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996, ஒகத்து 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 407 இல் விவரிக்கப்பட்டுள்ள அண்மை நிலஅளவைக்கமைய பதினேழு தசம் நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.4பே.) விஸ்தீரணமுடையது.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2006, ஒற்றோபர் 27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, திசெம்பர் 19 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொள்வனவு செய்யும் விதம்.**-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூப 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (கடன் மேற்பார்வை மற்றும் அறவீடுகள்" (தொலைபேசி இல. 011-2661816, 2661815) மற்றும் முகாமையாளர் - வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி (அம்பாறைக் கிளை) அவர்களிடம் (தொலைபேசி இல. 063-2222634-35) பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பீ. எவ். ஆரியரத்ன,
ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
நீதிமன்ற உத்தரவுபெற்ற ஆணையாளர்.

இல. 34/31 மற்றும் 32,
சட்டத்தரணி அலுவலக கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12

3-534

---

## மேல் மாகாண மேல் நீதிமன்று-கொழும்பு
## (வர்த்தக மேல் நீதிமன்று)

ஏல விற்பனை

(அகுங்கல மிருகசாலை வாசஸ்தலம் அமைந்திருந்த ஆதனம்)

வரையறுக்கப்பட்ட அமானா
இன்வெஸ்ட்மென்ற்ஸ்,
இல. 480, காலி வீதி, கொழும்பு 3.

வழக்காளி

வழக்கு இல.
மே. நீ. (சிவில்) எதிர்
43/2004 (1)

மொகமட் மசாகிம் மொகமட்,
"பேருவல ஜெம் பீறு",
காலி வீதி, அகுங்கல ;
இல. 7, நளீம் ஹாஜ்ஜியார் மவத்தை,
பேருவளை.

...................... எதிராளிகள்.

பிரசித்த நொத்தாரிசு மீரா சாகிப் அலிப் அவர்களால் 1999.05.19 ஆந் திகதிய 853 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட ஈட்டு உறுதியால் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் வழக்காளிக்குப் பொறுப்புக் கொடுபட்டுள்ளதென்றும், அப்பொறுப்புக்களின் நிமித்தம் கொடுக்கப்பட்ட ஆதனங்களுக்கு எதிராளிக்கெதிராக வழக்காளி இவ்வழக்கை வைத்துள்ளார்.

2005.02.28 ஆந் திகதி எதிராளியின் அனுமதியுடன் வழங்கப்பட்ட தீர்வைக்கமைவாக வழக்காளிக்குக் கொடுக்க வேண்டிய ரூபா 28,19,626.57 ஐ எதிராளி குறித்த கால எல்லைக்குள் செலுத்தத் தவறியுள்ளமையால் இவ்வாதனத்தை எலத்தில் விற்பதற்கு மன்று ஆணையாளர் ஒருவரை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு

நியமனம் செய்துள்ளதுடன் குறித்த தொகையான 28,19,626.57 ஐ அறவிட்டு மன்றில் வைப்புச் செய்யுமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

குறித்த ஆணையின் பிரகாரம் (2007.04.05) 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5 ஆந் திகதிய 11 மணிக்கு குறித்த ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் ஏலத்தில் விற்பனை செய்யப்படு மென்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**ஆதன இடாப்பு**

தென் மாகாணம், காலி மாவட்டம், பென்தோட்டை, வெலலவத்த கோறனே, பலப்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட கொஸ்கொடை அகுங்கல என்னும் அகுங்கலை மித்தாரமுல்ல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் மாவத்த கெதாவத்தை அல்லது எரமுதுககவத்தை என்றதும் மனன்லீடுனர்ஸ் வாழ்ந்ததுமான பிரிவிடல் செய்யப்பட்ட ஆதனம். இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. பேட்டி த சில்வா அவர்களால் 1995.05.20 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 5352 ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு "A" எனச் சுட்டப்பட்ட ஆதனம் இதற்கெல்லை வடக்கில் : கிராமவாசிகளால் கோரப்படுமாதனங்களான எட்டககமலகெதர வத்தையும், கமரங்ககவத்தையும், பெரககவத்தையும் ; கிழக்கில் : மினிஜோதி பபியா வசிக்கும் ஜம்புக்கவத்தையெனும் ஆதனம் ; தெற்கில்: மினிஜோதி பபியா வசிக்கும் ஆதனமும் சீலாவதியால் கோரப்படும் ஆதனமும், அமரத்துங்காவினால் கோரப்படும் ஆதனமும் ; மேற்கில் : காலி-கொழும்பு பிரதான வீதி. இதன் விசாலம் ஒரு ஏக்கர் ஒரு றூட் பதினைந்து பேர்ச்சுகள் (1ஏ. 1றூ. 15பே.)

குறித்த மாவத்த கெதரவத்தை அல்லது எரமுதுககவத்தை என்றதும் மனன்லீனர்ஸ் பாவித்ததுமான ஆதனம். இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரி. பி. ஏ. த சில்வா அவர்களால் 1990.08.15 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 5352 ஆம் இலக்கப்படத்தின்படியும் துண்டு 1 இது 4489 இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டது. இத்துண்டு 1 எனக்குறிக்கப்பட்ட ஆதனத்திற்கெல்லை - வடக்கில் : எட்டககமலகெதரவத்தை அல்லது கமரககவத்தையும் பெரககவத்தையும் கிராமவாசிகளால் கோரப்படும் இவ்வாதனத்தின் மிகுதி ஆதனமும் ; கிழக்கில் : ஜம்புசகவத்தையும் மினிஜோதி பேபி வகிக்கும் ஆதனமும் கிராமவாசிகள் கோரும் ஆதனமும் ; தெற்கில் : மினிஜோதி பேபி வசிக்கும் ஆதனமும் சீலாவதி வசிப்பதும் அவரால் கோரப்படும் ஆதனமும் ; மேற்கில் : காலி-கொழும்பு பிரதான வீதி. இதன் விசாலம் ஒரு ஏக்கர் பதினேழு பேர்ச்சுகள் (1ஏ. 0றூ. 17பே.) பயிர்வகைகளும் மரங்களும் மற்றும் யாவும் இதிலடங்கலும். (பதிவு 13/347/230 பலப்பிட்டிய காணிப் பதிவகம்).

**இதற்கு அணுகும் வழி**.- அகுங்கலையில் இடது பக்கமாக வீதியைப் பார்த்தபடியுள்ளதும் அகுங்கல மிருகசாலை அமைந்திருந்ததுமான ஆதனம் (காலி-கொழும்பு பிரதான வீதியில்)

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலவிற்பனை ஆணையாளருக்கு விற்பனை முடிந்தவுடன் பின்வரும் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். பணவைப்பு மூலமாகவோ, வங்கி டிராப்ற் மூலமாகவோ காசோலை பெற்றுக்கொள்ளப்படாது.

1. விற்பனைத் தொகையில் 25% வீதம் ;
2. நகரசபையின் விற்பனை வரி ;
3. புதினப்பத்திரிகை விளம்பரச் செலவு ;
4. ஆணையாளரின் கொமிசன் 2 1/2 வீதம் ;
5. நொத்தாரிஸ் கட்டணம் ;
6. எழுதுவினைஞரினதும் பிரசித்தம் செய்பவரினதும் கட்டணம்.

மிகுதி 75% வாங்கும் பெறுமதித் தொகையை நீதிமன்றின் பதிவாளருக்கு 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். அதன் பின் நீதிமன்றின் ஆணைக்கமைவாக விற்பனை அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பிப்பதன் மூலம் பிஸ்கால் மூலம் ஆட்சியுரிமை பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதி விபரங்களுக்கு**.- ஆப்டீன் அசோசியேற்ஸ், சட்டத்தரணிகள், 218, கல்ஸ்டோப் வீதி. கொழும்பு 12. தொலைபேசி இலக்கம் : 2334677

ஏர்வின் பெரேரா (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
சத்தியப்பிரமாணம்
செய்த மொழிபெயர்ப்பாளர்.

3, மாகொட வீதி,
நுகேகொடை.
தொலைபேசி இல. : 0112-810145
0777-212602

3-533

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

தொடர் இலக்கம் : ஓடி/2067/98

(இலக்கம் 60, எல்பில்மீகம, பிலிமத்தலாவை என்னும் முகவரியில் அமைந்துள்ள "ஹரிஸ்சந்திர அயன் வேர்க்ஸ் அன்ட் கன்ஸ்றக்சன்ஸ்" ஐச் சேர்ந்த கலுகலகே ஹரிஸ்சந்திர என்பவருக்குச் சொந்தமான ஆதனம்)

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட திர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.09.24 ஆந் திகதிய 1,360 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியிலும் 2004.09.13 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய புதினப்பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும்பொருட்டு இதன் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில்

விபரிக்கப்பட்டுள் சொத்தும் நிலமனையும் இலக்கம் 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களால் 2007.04.25 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவரை, மெதபளாத்த கோறளை, கிரிவுல வில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். பீ. டி. வேத்தாவ அவர்களால் தயாரிக்கப்பட்ட 1984, மாச்சு 23 ஆந் திகதிய 152 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, "யக்கே வத்த" அல்லது "யக்கன்கே பிற்றியெ ஹேன" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, மேற்குறிப்பிட்ட வரைபடத்திற்கிணங்க வடக்கில் : குலரத்னவின் காணியின் வேலியும் ; கிழக்கில் : ஏ. ஏ. ஆரியதாசவின் காணியும் வேலியும் ; தெற்கில் : அதே காணியின் மிகுதித்துண்டும் ; மேற்கில் : இலுக்வத்தவிற்குச் செல்லும் கிராம சபை றோட்டும் எல்லைகளாகக் கொண்டு இருபத்திநான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 24.4பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் சி. 317/249 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. ஈ. எம். யூ. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

3-523

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.